வரு.73 இல. 03 ★
www.vaaramanjari.lk
/Thinakaran.lk /ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

32பக்கங்கள் 40/-

2021 ஜனவரி 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
January 17 Sunday, 2021





இலவச இணைப்பு



வாயால் கெட்ட வண்ஷொட் 09

05 நல்லாட்சி அரசே என்னை பழிவாங்கியது



மீண்டும் காதலில் ஓவியா 18

# உழைப்பின் மகிமையை பாதுகாக்கும், சமூகமொன்றுக்கான கல்வி முறைமை



## உயர்கல்வி நிறுவன விழாவில் ஜனாதிபதி கோட்டாபய உரை

"புதிய இலங்கு நிலையின்" கீழ் உழைப்பின் மகிமையை பாதுகாக்கும் மற்றும் திறன்கள் நிறைந்த ஒரு சமூகத்தை உருவாக்கக் கூடிய கல்வி முறை அறிமுகப்படுத்தப்படுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

விரைவான அபிவிருத்திக்காகவும், குறுகிய காலத்தில் எதிர்பார்க்கப் படும் பொருளாதார இலக்குகளை அடையவும் தேசிய கல்வி கொள்கை ஏற்கனவே வகுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

நீர்கொழும்பிலுள்ள 16ஆவது பெனடிக்ட் கத்தோலிக்க உயர் கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற பட்டப் படிப்புகளை பதிவு செய்வதற்கான ஆரம்ப விழாவில் (15) கலந்து கொண்டு ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

21 ஆம் நூற்றாண்டின் சிரேஷ்ட அறிஞர்களில்

04



நல்லூர் கந்தசுவாமி ஆலய அலங்கார வளைவு திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றபோது... (படம்: ஐ.சிவசாந்தன்)

# அடிப்படைச் சம்பளம் ரூ.700; இதர கொடுப்பனவுகளுடன் ரூ.1,105

## புதிய யோசனையை முன்வைத்தது முதலாளிமார் சம்மேளனம்

சுப்பிரமணியம் நிஷாந்தன்

தொழில் அமைச்சிடம் முன்வைத்து இதனைவிட எவ்விதமான அதிகரிப்பும் கிடையாதெனவும் அறிவிப்பு

முதலாளிமார் சம்மேளனம் 700 ரூபா அடிப்படைச் சம்பளத்துடன், இதர கொடுப்பனவுகள் அடங்கலாக 1,105 ரூபா மொத்தச் சம்பளத் தொகையை தொழிலாளர்கள் பெற்றுக்கொள்ளும் புதிய யோசனையொன்றை தொழில் அமைச்சிடம் முன்வைத்துள்ளது.

இதனைவிட எந்தவிதத்திலும் சம்பள அதிகரிப்பை மேற்கொள்ள முடியாதென தோட்டத் துரைமார் சம்மேளனத்தின் தலைவர் பாத்திய புளுமுல்ல தெரிவித்தார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,000 ரூபா சம்பள உயர்வை பெற்றுக்கொடுக்கும் தீர்மானம் அமைச்சரவையில் நிறைவேற்றப் பட்டு ஓராண்டுகாலம் பூர்த்தியாகியுள்ளது.

அரசாங்கமும் தொழிற்சங்கங்களும் கம்பனிகளுடனும் கடந்த ஒருவருடகாலமாக பல சுற்று பேச்சுவார்த்தைகளை இந்த விடயம் தொடர்பில் நடத்தியிருந்தது.

கடந்த வரவு செலவுத் திட்ட உரையின் போது ஜனவரி முதலாம் திகதி முதல் கட்டாயம் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,000 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படுமென பிரதமர் உறுதியளித்திருந்தார்.

அத்துடன், 1,000 ரூபா சம்பள உயர்வை வழங்க மறுக்கும் கம்பனிகளுக்கு எதிராக சட்டத்திருத்தத்தினூடாக நடவடிக்கையெடுக்கப்படு மெனவும் எச்சரிக்கை விடுத்திருந்...

# முதலாளிமார் சம்மேளனத்தின் யோசனையை ஏற்கமாட்டோம்

## எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாதது என்கிறார் செந்தில்

கே.அசோக்குமார், சுப்பிரமணியம் நிஷாந்தன்



இ.தொ.கா முன்வைத்த சம்பள அதிகரிப்பு விடயத்தில் மாற்றமில்லை

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயம் தொடர்பில் முதலாளிமார் சம்மேளனம் தொழில் அமைச்சிடம் கையளித்துள்ள யோசனையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் ...

முன்னாள் அமைச்சரும் பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்புச் ...ளாளருமான செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

...00 ரூபா அடிப்படைச் சம்பளத்து... உற்பத்தி கொடுப்பனவாக 150 ...வும் வரவு கொடுப்பனவாக 150 ரூபாவும், ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி கொடுப்பனவாக 105 ரூபாவை உள்ளடக்கி கம்பனிகளால் முன்மொழியப்பட்டுள்ள புதிய சம்பள யோசனை தொடர்பில் இ.தொ.காவின் நிலைப்பாடு என்னவென வினவிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடிப்படைச் சம்பளத்தில் போதிய அதிகரிப்பு

04





# காழ்ப்புணர்ச்சி கொண்டோர் எனது பெயரில் பொய்ச் செய்தி

## SLMC பிரதித் தலைவர் ஹரிஸ் எம்.பி

கல்முனை மத்திய தினகரன் நிருபர்



காழ்ப்புணர்ச்சி கொண்ட அரசியல் முகவரியற்ற ஒரு சிலரின் கருத்துக்களே சமூக வலைத்தளங்களில் வந்த செய்திகளாகும். அவை அப்பட்டமான பொய்யான செய்திகள் எனவும் அந்த செய்திகளுக்கும் எனக்கும் எவ்வித தொடர்புகளுமில்லை எனவும் மறுக்கிறேன் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பிரதித்தலைவரும் பாராளுமன்ற

04

...த
...ர்
...ப்பு

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு தமிழ் கட்சிகளின் கோரிக்கைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நான்கு அம்ச கோரிக்கைகளை முன்வைத்து தமிழ் கட்சிகளின் சார்பாக தயா... அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பொறுப்புக்கூறல் சம்பந்தமாக பலமான நடவடிக்கை எடுப்பதற்காக உரிய தளங்களுக்கு இவ்விடயம் கொண்டு

04

# LTTE இயக்கம் மீதான தடையை அமெரிக்கா நீடிப்பு





தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை தொடர்ந்தும் தடை செய்யப்பட்ட வெளிநாட்டு அமைப்பின் பட்டியலில் வைத்திருக்க அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

## நோர்வூட் கெசல்கமுவ ஓயா ஆற்றில்

# உருக்குலைந்த நிலையில் பெண்ணின் சடலம் மீட்பு

ஹற்றன் சுழற்சி, ஹற்றன் விசேட, நோட்டன் பிரிஜ் நிருபர்கள்

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காசல்ரீ நீர்த்தேக்கத்திற்கு நீர் வழங்கும் கெசல்கமுவ ஓயா ஆற்றில் (16) உருக்குலைந்த நிலையில் பெண்ணின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது. சடலமாக மீட்கப்பட்டவர் மஸ்கெலியா ... நோர்ட் ஸ்ரீபாத பிரிவைச் சேர்ந்த 65 வயதுடைய சிதம்பரம் ருக்மணி என்ற பெண் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

04

## உலகின் மிகப்பெரிய தடுப்பூசி திட்டம்;

# இந்தியாவில் ஆரம்பித்து வைத்தார் பிரதமர் மோடி



உலகின் மிகப்பெரிய தடுப்பூசி திட்டத்தை பிரதமர் மோடி நேற்று ஆரம்பித்து வைத்ததையடுத்து, நாடு முழுவதும் 3,006 மையங்களில் தடுப்பூசி போடும் பணி நடைபெறுகிறது.

இந்தியாவில் கொரோனாவுக்கு எதிரான தடுப்பு மருந்துகளான கோவிஷீல்டு, கோவேக்சின் ஆகிய மருந்துகளின் பல்வேறு கட்ட வெற்றிகரமான பரிசோதனைகளுக்கு பின், இந்த தடுப்பூசிகளின் அவசர பயன்பாட்டுக்கு

04

## தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளின் பிரகாரம்;

# பிரபல பாடசாலைகளில் மாணவர்களை இணைப்பதற்கான வெட்டுப்புள்ளி வெளியீடு

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பிரபல பாடசாலைகளில் இணைத்துக் கொள்வதற்கான வெட்டுப் புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ் மொழி மூலமான பாடசாலைகளுக்கான வெட்டுப்புள்ளி விபரங்கள் கலவன் பாடசாலைகள், ஆண்கள் பாடசாலைகள், மகளிர் பாடசாலைகள் என தனித்தனியே வெட்டுப்புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன. வெட்டுப்புள்ளிகளின் முழுமையான விபரங்கள் வருமாறு, தமிழ் கலவன் பாடசாலைகளுக்கான வெட்டுப் புள்ளிகள்

04

# இரணைமடு குளக்கட்டின் 101 ஆண்டுகள் பூர்த்தி விழா

ஓமானில் தவித்த 283 பேர் நேற்று நாடு திரும்பினர்

# கம்பஹாவில் தனியார் நிதி நிறுவனத்தில் பாரிய கொள்ளை

